# அவசரக்கூட்டம்

பல்லடம் நகராட்சி தனிஅலுவலரின் அவசரக்கூட்டம் 2021 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு பல்லடம் நகராட்சி அலுவலக நகர மன்றக்கூடத்தில் நடைபெற உள்ளது.

**தனி அலுவலர்,**
**பல்லடம் நகராட்சி**

**பொருள் : 01**

நகராட்சி பொதுநிதி 2020–2021 ன் கீழ் வார்டு எண் :18 காந்தி நகர், ஜே.கே.ஜே காலனி, பி.டி.ஓ. காலனி மற்றும் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானம் முதல் மங்கலம் சாலை வரை மழைநீர் வடிகால், சிறுபாலம் அமைத்தல் மதிப்பீடு ரூ.36.00 இலட்சத்திற்கு 16.02.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் :–

1. திரு.C.தேவராஜ்,
ஒப்பந்ததாரர், திருப்பூர். – மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.14% குறைவு

2. திரு.C.சண்முகம்,
ஒப்பந்ததாரர், திருப்பூர். – மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.13% அதிகம்

இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.14% குறைவான விலை விகிதத்தை கொடுத்துள்ள திரு.C.தேவராஜ், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றும், பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களால் 17.02.2021 அன்று முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண்: 1745/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**
மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 30/ நாள் : 19.02.2021 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 02**

பல்லடம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வடுகபாளையம் கிராமம், க.ச.எண் க.ச.எண் 243/1A1 மற்றும் 244/1 ல் 2.77 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க திரு.பி.ராஜ்குமார், என்பவர் அனுமதி கோரியுள்ளார். நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.2329/200/TCP-3, நாள்.24.10.2020 ல், உத்தேச சாலைகள், பூங்கா மற்றும் TANGEDCO ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி தார்சாலைகள் மற்றும் மின்கம்பங்கள் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளர் 12.02.2021 அன்று சான்று வழங்கியுள்ளார். தெரு விளக்கு மின் கம்பம் அமைக்க மின்வாரியத்திற்கு ரூ.1,93,389/–, நாள்.09.02.2021 அன்று வங்கி வரவோலை மற்றும் மின்கம்பங்களில் 7 எண்ணிக்கை 20W LED தெருவிளக்குகள் அமைக்க ரூ.17,248/–, நாள்.16.02.2021 ல் நகராட்சி கருவூலத்தில் செலுத்தியுள்ளார். மேலும், உத்தேச சாலைகள், பூங்கா மற்றும் TANGEDCO ஒதுக்கீட்டினை தானபத்திர பத்திரப்பதிவு எண்.3080/2021, நாள்.18.02.2021 ன் படி, பல்லடம் நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்துள்ளார். எனவே, மேற்படி மனைப்பிரிவில் அமையும் சாலைகள், பூங்கா மற்றும் TANGEDCO ஒதுக்கீடுகளை நகராட்சியின் பராமரிப்பிற்கு தானமாக பெற்றுக்கொள்ள தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

உத்தேச மனைப்பிரிவில் அமையும் ம் சாலைகள், பூங்கா மற்றும் TANGEDCO ஒதுக்கீடு இடங்களை நகராட்சியின் பராமரிப்பிற்கு ஏற்றுக்கொள்ள தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.558/2019/எப்1)

**தீர்மானம் எண் 31/ நாள் : 19.02.2021 அனுமதிக்கப்படுகிறது.**

**தனி அலுவலர்/**
**ஆணையாளர்**
**பல்லடம் நகராட்சி**

# சாதாரணக்கூட்டம்

பல்லடம் நகராட்சி தனிஅலுவலரின் சாதாரணக்கூட்டம் 2021 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு பல்லடம் நகராட்சி அலுவலக நகர மன்றக்கூடத்தில் நடைபெற உள்ளது.

**தனி அலுவலர்,**
**பல்லடம் நகராட்சி**

## பொருள் : 01

பல்லடம் நகராட்சியில் பொது நிதி 2020–2021ன் கீழ் கீழ்க்காணும் 9 பணிகளுக்கு 19.02.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | என்.ஜி.ஆர். சாலையில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகம் 40 கடைகளின் கூரைப்பகுதி பழுது பார்த்து Weathering course மற்றும் Pressed Tiles அமைத்தல் மற்றும் கட்டிடத்தின் உள்ளே சிறு சிறு பராமரிப்பு செய்தல் | 9.80 | திரு.P.திருமூர்த்தி, ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.80% அதிகம் |
| | | | திரு. P.சண்முகம், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.15% குறைவு |
| 2 | வார்டு எண் :11 எஸ்.என்.ஆர் கார்டன் பகுதியில் நான்கு இடங்களில் உள்ள பழுதடைந்த Pipe culvert ஐ அப்புறப்படுத்தி புதியதாக RCC culvert அமைத்தல் | 4.90 | திரு.A.மதுரைவீரன், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.18% குறைவு |
| | | | திருவாளர்கள். மதுரா இன்ஞ்னியரிங், ஒப்பந்ததாரர், திருப்பூர் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.75% அதிகம் |
| 3 | பல்லடம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள டோனர்களுக்கு ரீபில் செய்தல், ரீகன்டிசன் செய்தல் மற்றும் கலர் பிரிண்டருக்கு புதிதாக டோனர்கள் சப்ளை செய்தல் | 2.00 | திருவாளர்கள். ஸ்பைடர் டெக்னாலஜி, திருப்பூர். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.10% குறைவு |
| | | | திருவாளர்கள். டிஜி பிரிண்ட் சர்வீஸஸ், சேலம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.05% அதிகம் |
| 4 | பல்லடம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணினி, பிரிண்டர், நெட்வொர்க், ஸ்கேனர், தடையில்லா மின்சாரம் வழஙகும் இயந்திரம் (UPS) மற்றும் அம்மா உணவகம், மாதப்பூர் உரக்கிடங்கில் உள்ள கண்காணிப்பு கேமரா ஆகியவற்றிற்கு ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 2.40 | திருவாளர்கள். ஸ்பைடர் டெக்னாலஜி, திருப்பூர். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.12% குறைவு |
| | | | திருவாளர்கள். டிஜி பிரிண்ட் சர்வீஸஸ், சேலம். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.25% அதிகம் |
| 5 | வார்டு எண்:01 கல்லம்பாளையம் அரிசன காலனி முதல் ஏற்கனவே உள்ள கழிவுநீர் தொட்டி வரை ஆர்.சி.சி. குழாய் பதித்து கழிவுநீரை வெளியேற்றுதல் | 1.50 | திரு.P.திருமூர்த்தி, ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.90% அதிகம் |
| | | | திரு. P.சண்முகம், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.11% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | வார்டு எண்:11 ஸ்ரீ நகர் இரண்டாவது வீதி மற்றும் குமரன் நகர் மூன்றாவது வீதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 9.00 | திரு.C.தேவராஜ், ஒப்பந்ததாரர், திருப்பூர் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.16% குறைவு |
| | | | திரு.C.சண்முகம், ஒப்பந்ததாரர், திருப்பூர் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 3.40% அதிகம் |
| 7 | வார்டு எண்:15 அண்ணாநகர் மேல்நிலைத் தொட்டி வளாகத்தில் தரைத்தளக் கற்கள் (பேவர் பிளாக்) பதித்தல் | 9.80 | திரு.C.தேவராஜ், ஒப்பந்ததாரர், திருப்பூர் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.14% குறைவு |
| | | | திரு.C.சண்முகம், ஒப்பந்ததாரர், திருப்பூர் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 3.50% அதிகம் |
| 8 | வார்டு எண்:15 அண்ணாநகர் நகராட்சி தொடக்கப்பள்ளி கட்டிடம் பராமரித்தல், புதியதாக சிறுநீர், கழிப்பிட வசதி மேற்கொள்ளுதல் மற்றும் மின்சார வசதி ஏற்படுத்துதல் | 4.90 | திரு.C.தேவராஜ், ஒப்பந்ததாரர், திருப்பூர் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.15% குறைவு |
| | | | திரு.C.சண்முகம், ஒப்பந்ததாரர், திருப்பூர் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.76% அதிகம் |
| 9 | வார்டு எண்:15 அண்ணாநகர் ஓம்சக்தி கோவில் முதல் மற்றும் இரண்டாவது வீதியில் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகாலை பராமரித்தல் மற்றும் புதியதாக மழைநீர் வடிகால் அமைத்தல் | 4.90 | திரு.C.தேவராஜ், ஒப்பந்ததாரர், திருப்பூர் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.10% குறைவு |
| | | | திரு.C.சண்முகம், ஒப்பந்ததாரர், திருப்பூர் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 3.30% அதிகம் |

(ந.க.எண்: 1288/2020/இ1)

மேற்காணும் 9 பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 32/ நாள் : 26.02.2021 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 02**

அரசாணை எண் : 118, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 26.09.2014 ல் தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 360 இடங்களில் அம்மா உணவகங்கள் திறப்பதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

இநநகராட்சிக்குட்பட்ட அண்ணா பேருந்து நிலையம் அருகில் அம்மா உணவக கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு தேவைப்படும் மளிகை பொருட்கள், காய்கறிகள், ஆவின் தயிர், அரிசி மற்றும் அம்மா உணவக பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் சமையல் எரிவாயு ஆகியவைகளுக்கு ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.40.00 இலட்சத்தை ஜனவரி 2021 முதல் மார்ச் 2022 வரையிலான மாதங்களுக்கு செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 33/ நாள் : 26.02.2021 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 03**

பல்லடம் நகராட்சியின் 2021 - 2022ம் ஆண்டிற்கான வரவு, செலவு திட்டம் மற்றும் 2020-2021ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவுத்திட்டம் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

(ந.க.எண் : 504/2021/சி1)

**தீர்மானம் எண் 34/ நாள் : 26.02.2021 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 04**

பல்லடம் நகராட்சி பொது மற்றும் பொது சுகாதாரப்பிரிவிற்கு 2021- 2022ம் நிதியாண்டிற்கு மேற்கொள்ள வேண்டியுள்ள கீழ்க்கண்ட பல்வகை உத்தேச செலவினங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | விபரம் | உத்தேச செலவு விபரம் ரூ. |
|---|---|---|
| 1 | சீருடைகள் காலனிகள் மற்றும் தையற்கூலி | 5,00,000.00 |
| 2 | லாரி தகுதி சான்று பெறுதல் மற்றும் பழுது நீக்கும் பணி செய்தல் உதிரி பாகங்கள் வாங்குதல் | 30,00,000.00 |
| 3 | வாகனங்களுக்கு காப்பீட்டு தொகை மற்றும் சாலை வரி கட்டணம் பசுமை வரி செலுத்துதல் | 10,00,000.00 |
| 4 | பெட்ரோல், டீசல் மற்றும் ஆயில் உட்பட செலவினம் | 45,00,000.00 |
| 5 | தளவாட சாமான்கள் வாங்குதல் | 10,00,000.00 |
| 6 | தூய்மை பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வாங்குதல் | 5,00,000.00 |
| 7 | கிருமி நாசினிகள், ப்ளிச்சிங் பவுடர், சுண்ணாம்புத்தூள், பினாயில், பைரித்திரம், அபேட், பேசில்லஸ் களைக்கொல்லிகள் போன்றவை வாங்குதல் (விழிப்புணர்வு பிரசுரங்கள்) | 50,00,000.00 |
| 8 | நாளிதழில் விளம்பரம் செய்தல் | 2,00,000.00 |

**அலுவலக குறிப்பு**

1. வருவாய் நிதியிலிருந்து மேற்படி தொகையை செலவு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதாரத்தின் அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்கொண்டவற்றை வாங்கவும், தனி அலுவலரின் முன் அனுமதி எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கவும், அதற்கான தொகையை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 35/ நாள் : 26.02.2021 அனுமதிக்கப்படுகிறது.**

**பொருள் : 05**

பல்லடம் நகராட்சியில் பொது நிதி 2020–2021ன் கீழ் கீழ்க்காணும் பணிக்கு 24.02.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்: 04 இளங்கோ வீதி, பி.எம்.எஸ். நகர் பகுதியில் ஏற்கனவே உள்ள பழுதடைந்த சிறுபாலத்தின் Deck slab அப்புறப்படுத்தி இருபக்கமும் பக்க சுவர் உயர்த்தி சிறுபாலம் அமைத்தல் | 1.20 | திரு.P.முருகன், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.79 % அதிகம் |
| | | | திரு. C.சண்முகம், ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.10 % குறைவு |

(ந.க.எண்: 1288/2020/இ1)

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்க தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண் 36/ நாள் : 26.02.2021 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் : 06

பல்லடம் நகராட்சியில் 15வது நிதிக்குழு 2020–2021ன் கீழ் கீழ்க்காணும் 5 பணிகளுக்கு 24.02.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு 50 எண்ணிக்கையிலான இரட்டை குப்பைத் தொட்டிகள் (Twin bins) (ஒவ்வொன்றும் 50 லிட்டர் கொள்ளளவு) சப்ளை செய்தல் | 6.00 | திருவாளர்கள்.சார்ப் சிஸ்டம்ஸ், கோவை | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.50 % குறைவு |
| | | | திருவாளர்கள். செல்வராம் என்டர்பிரைசஸ், திருப்பூர். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.52 % அதிகம் |
| 2 | ஆண்டாள் நகர் மற்றும் மாதப்பூர் நுண்ணுயிர் உரமாக்கும் மையத்திற்கு 2 எண்ணிக்கையிலான உரம் சலிக்கும் இயந்திரம் (Manure seiver machine) சப்ளை செய்தல் | 1.00 | திருவாளர்கள்.சார்ப் சிஸ்டம்ஸ், கோவை | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.81 % குறைவு |
| | | | திருவாளர்கள். செல்வராம் என்டர்பிரைசஸ், திருப்பூர். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.23 % அதிகம் |
| 3 | பேட்டரி வண்டிகளுக்கு 120 எண்ணிக்கையிலான குப்பைத் தொட்டிகள் (ஒவ்வொன்றும் 80 லிட்டர் கொள்ளளவு) மற்றும் விழிப்புணர்வு செய்ய 24 எண்ணிக்கையிலான ஆம்ளிபையர் வாங்குதல் | 1.90 | திருவாளர்கள்.சார்ப் சிஸ்டம்ஸ், கோவை | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.28 % குறைவு |
| | | | திருவாளர்கள். செல்வராம் என்டர்பிரைசஸ், திருப்பூர். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.56 % அதிகம் |
| 4 | குப்பைகளை கையினால் எடை அளவீடு செய்யும் இயந்திரம் 30 எண்ணிக்கை (Hand weighting machine) சப்ளை செய்தல் | 0.20 | திருவாளர்கள்.சார்ப் சிஸ்டம்ஸ், கோவை | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.76 % குறைவு |
| | | | திருவாளர்கள். செல்வராம் என்டர்பிரைசஸ், திருப்பூர். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 3.82 % அதிகம் |
| 5 | ஆண்டாள் நகர் உரக்கிடங்கிற்கு 500 கிலோ திறனுடைய ஒரு எடை இயந்திரம் (Weighting machine) சப்ளை செய்தல் | 0.25 | திருவாளர்கள்.சார்ப் சிஸ்டம்ஸ், கோவை | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.40 % குறைவு |
| | | | திருவாளர்கள். செல்வராம் என்டர்பிரைசஸ், திருப்பூர். | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.21 % அதிகம் |

(ந.க.எண்: 1445/2020/இ1)

மேற்காணும் 5 பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலகக் குறிப்பு :**</u>
மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>**தீர்மானம் எண் 37/ நாள் : 26.02.2021 அனுமதிக்கப்படுகிறது.**</u>

## பொருள்:07

நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது நிதி 2020–2021 ன் கீழ் காந்தி நகர், ஜே.கே.ஜே காலனி, பி.டி.ஓ. காலனி மற்றும் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மைதானம் முதல் மங்கலம் சாலை வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணிக்கு 16.02.2021 தேதியன்று நடைபெற உள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவில் தமிழ் நாளிதழில் 26.01.2021 ஆம் தேதியில் விளம்பரம் செய்தமைக்கான தொகை ரூ.9,450/– ‘‘பிரைட் அட்வர்டைசிங், சென்னை’’ அவர்களிடமிருந்து 15.02.2021 அன்று பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்கண்ட பட்டியல் தொகை ரூ.9,450/–ஐ ‘‘பிரைட் அட்வர்டைசிங், சென்னை’’ அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்:1745/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண் 38/ நாள் : 26.02.2021 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள்:08

நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 15வது மத்திய நிதிக்குழு திட்டம் 2020–2021 ன் கீழ் குடிநீர் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு 24.02.2021 தேதியன்று நடைபெற உள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவில் தமிழ் நாளிதழில் 05.02.2021 ஆம் தேதியில் விளம்பரம் செய்தமைக்கான தொகை ரூ.12,600/– ‘‘பிரைட் அட்வர்டைசிங், சென்னை’’ அவர்களிடமிருந்து 25.02.2021 அன்று பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்கண்ட பட்டியல் தொகை ரூ.12,600/–ஐ ‘‘பிரைட் அட்வர்டைசிங், சென்னை’’ அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்:1445/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண் 39/ நாள் : 26.02.2021 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள்:09

பல்லடம் நகராட்சியில் 26.02.2021ம் தேதியில் நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் அதிகபட்ச ஏலத்தொகை கோரிய கீழ்கண்ட இனங்கள் பொது ஏலத்தில் எடுக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் கீழ்கண்டவாறு :-

| வ.எண் | கடைகள் மற்றும் குத்தகை இனங்கள் விபரம் | உரிமதாரர் | அதிகபட்ச ஏலத்தொகை கோரிய விபரம் | உரிம காலம் |
|---|---|---|---|---|
| 1 | என்.ஜி.ஆர். ரோடு ஐயப்பன் கோவில் அருகில் புதுப்பிக்கப்பட்ட கடை | எம்.கிருஷ்ணகுமார் 28, அப்பர் பஜார், உதகமண்டலம் | ரூ.40,600/- | 01.04.2021 முதல் 31.03.2024 வரை |
| 2 | மங்கலம் ரோட்டில் அமைந்த கடை எண் 3 | வினோதினி 55சி2, முல்லை நகர், பல்லடம் | ரூ.10,000/- | 01.04.2021 முதல் 31.03.2024 வரை |
| 3 | மங்கலம் ரோடு ஆட்டிறைச்சி கடை எண் 4 | எஸ்.மாலிக் பாஷா பள்ளிவாசல் வீதி, பல்லடம். | ரூ.15,100/- | 01.04.2021 முதல் 31.03.2024 வரை |
| 4 | வாரச்சந்தையில் அமைந்துள்ள நவீன கட்டண கழிப்பிடம் வசூலித்தல். | சண்முகசுந்தரம் 95, மங்கலம் ரோடு பல்லடம் | ரூ.85,750/- | 01.04.2021 முதல் 31.03.2024 வரை |
| 5 | மாணிக்காபுரம் ரோடு ஆட்டிறைச்சி கடை எண் 1 | சரவணன் 6ஏ1, மாணிக்காபுரம் ரோடு, பல்லடம் | ரூ.15,100/- | 01.04.2021 முதல் 31.03.2024 வரை |
| 6 | மாணிக்காபுரம் ரோடு | கதிரேஷ்குமார், | ரூ.15,150/- | 01.04.2021 முதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆட்டிறைச்சி கடை எண் 2 | 32/36,<br>திருப்பூர் ரோடு,<br>பல்லடம் | | 31.03.2024 வரை |
| 7 | மாணிக்காபுரம் ரோடு<br>ஆட்டிறைச்சி கடை எண் 3 | எஸ்.செந்தில்குமார்<br>63சி, காமராஜ் நகர்,<br>பல்லடம் | ரூ.15,100/- | 01.04.2021 முதல்<br>31.03.2024 வரை |
| 8 | மங்கலம் ரோடு<br>ஆட்டிறைச்சி கடை எண் 1 | சாமிநாதன்<br>32, ராயர்பாளையம்,<br>பல்லடம் | ரூ.15,250/- | 01.04.2021 முதல்<br>31.03.2024 வரை |
| 9 | மங்கலம் ரோடு<br>ஆட்டிறைச்சி கடை எண் 2 | மிதுன்,<br>14/1, நன்னாசாகிப் வீதி, பல்லடம் | ரூ.16,400/- | 01.04.2021 முதல்<br>31.03.2024 வரை |
| 10 | அண்ணா நகர்<br>ஆட்டிறைச்சி கடை | வி.கோபிநாத்<br>நேரு நகர்,<br>அம்மாபாளையம். | ரூ.15,100/- | 01.04.2021 முதல்<br>31.03.2024 வரை |
| 11 | பச்சாபாளையம்<br>ஆட்டிறைச்சி கடை | ஜீவிதா,<br>23/15ஏ, பட்டேல் ரோடு,<br>பல்லடம் | ரூ.15,200/- | 01.04.2021 முதல்<br>31.03.2024 வரை |
| 12 | வடுகபாளையம்<br>ஆட்டிறைச்சி கடை | ஆர்.யுவராஜ்,<br>40/43, பொள்ளாச்சி ரோடு,<br>பல்லடம் | ரூ.15,100/- | 01.04.2021 முதல்<br>31.03.2024 வரை |

மேற்காணும் இனங்களில் வரிசை எண் 1 மற்றும் 2 ஆகிய கடைகளுக்கான ஏலம் கோரப்பட்டதில், அதிகபட்ச ஏலத்தொகையாக கோரியதை மன்றம் ஏற்கவும், அதன் உரிமகாலம் 01.04.2021 முதல் 31.03.2030 வரை ஆகும். மேற்கண்ட உரிமதாரர் அவரது விருப்பத்தின்பேரில் ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை 15% வாடகையை உயர்வு செய்து உரிமத்தை புதுப்பித்துக் கொள்ளவும் மற்றும் வரிசை எண் 3 முதல் 12 வரையுள்ள இனங்களுக்கான ஆண்டு குத்தகை அதிகபட்ச ஏலத்தொகை கோரியதை மன்றம் ஏற்கவும், அதன் உரிம காலம் 01.04.2021 முதல் 31.03.2024 வரையான காலம் ஆகும். ஒவ்வொரு ஆண்டிற்கும் 5% வாடகை உயர்வு செய்து உரிம காலத்தை புதுப்பித்துக் கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் 40/ நாள் : 26.02.2021 அனுமதிக்கப்படுகிறது.</u>**

## <u>பொருள்:10</u>

பல்லடம் நகராட்சியில் 26.02.2021 ல் நடைபெற்ற பொது ஏலத்தில் ஆண்டு குத்தகை இனங்களான பேருந்து நிலைய நுழைவு கட்டணம் வசூலித்தல், வாரச்சந்தை சுங்கம் வசூலித்தல் மற்றும் பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள நவீன கட்டண கழிப்பிடம் வசூலித்தல், ஆகிய இனங்கள் ஏலம் போகாததாலும், 26.02.2021ம் தேதியில் தமிழக சட்டமன்ற தேர்தல் தேதி அறிவித்துள்ளதால், தேர்தல் நடத்தை விதிகள் அமுலுக்கு வந்துள்ளதால், மேற்கண்ட இனங்களுக்கு மறு ஏலம் கொண்டு வர இயலாது. 01.04.2021 முதல் ஏலம் போகும் வரையிலான காலங்களுக்கு நகராட்சி மூலம் துறை ரீதியான வசூல் பணி மேற்கொள்ளவும், அதற்கான பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பூர் அவர்களின் 2020 -2021 ம் ஆண்டிற்கான செயல்முறைகளில் ஆணையிடப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் வசூல் பணியினை மேற்கொள்ளவும், அதற்காகும் செலவினத்தொகையை மன்றம் ஏற்கவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் 41/ நாள் : 26.02.2021 அனுமதிக்கப்படுகிறது.</u>**

## **பொருள்:11**

பல்லடம் நகராட்சி பகுதிகளுக்குட்பட்ட ஏலம் போகாத நகராட்சியின் கடைகள் மற்றும் ஆண்டு குத்தகை இனங்களுக்கு மறு ஏலம் கோருவதற்கும், மேற்கண்ட இனங்கள் ஏலம் கோருவதற்கும், **01.01.2021** முதல் **31.03.2022** வரையிலான காலத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பூர் அவர்கள் மூலமாக செய்தி வெளியிட ஆகும் தோராய செலவினத்தொகை ரூ.**5.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 42/ நாள் : 26.02.2021 அனுமதிக்கப்படுகிறது.**

## **பொருள்:12**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட 18 வார்டுகளில் உள்ள பொதுமக்களுக்குTWAD Board மூலமாக குடிநீர் விநியோகம் பெற்று பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கான ஒரு வருட குடிநீர் கட்டணத்தொகை ரூ.156.00 இலட்சத்தை TWAD Board நிறுவனத்திற்கு மன்றத்தின் அனுமதி பெற்று வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 43/ நாள் : 26.02.2021 அனுமதிக்கப்படுகிறது.**

## **பொருள்:13**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட 18 வார்டுகளில் உள்ள தெருவிளக்கு தொடர்பான அவ்வப்போது மின்சார வாரியத்தால் பெறப்படும் மின்சாரக்கட்டணத் தொகையை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 44/ நாள் : 26.02.2021 அனுமதிக்கப்படுகிறது.**

## **பொருள்:14**

பல்லடம் நகராட்சி அலுவலகத்தில் பயன்பாட்டில் உள்ள அலுவலக தொலைபேசி மற்றும் CUG எண்ணிற்கான கட்டணத்திற்கு அவ்வப்போது பெறப்படும் தொலைபேசி கட்டணத்தை BSNL மற்றும் Airtel நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 45/ நாள் : 26.02.2021 அனுமதிக்கப்படுகிறது.**

## **பொருள்:15**

பல்லடம் நகராட்சியில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அலுவலக நிமித்தமாக வெளியூர் சென்று வந்தமைக்கான பயணப்பட்டியல் பெறப்படின் அதற்கான பயணத்தொகையினை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு**
அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் 46/ நாள் : 26.02.2021 அனுமதிக்கப்படுகிறது.**

**<u>பொருள்:16</u>**

பல்லடம் நகராட்சி பொதுப்பிரிவு, வருவாய்ப்பிரிவு, நகரமைப்பு பிரிவு, பொது சுகாதாரப்பிரிவு மற்றும் பொறியியல் பிரிவுகளுக்கு 2021- 2022ம் ஆண்டிற்கு தேவையான பதிவேடுகள் மற்றும் எழுதுபொருட்கள் ஆகியவைகளை கூட்டுறவு அச்சகத்திலிருந்து விநியோகம் பெற ஆகும் தோராய செலவினத்தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் 47/ நாள் : 26.02.2021 அனுமதிக்கப்படுகிறது.</u>**

**தனி அலுவலர்/**
**ஆணையாளர்**
**பல்லடம் நகராட்சி**

# <u>அவசரக்கூட்டம்</u>

பல்லடம் நகராட்சி தனிஅலுவலரின் அவசரக்கூட்டம் 2021 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15ம் நாள் புதன்கிழமை காலை 11.00 மணிக்கு பல்லடம் நகராட்சி அலுவலக நகர மன்றக்கூடத்தில் நடைபெற உள்ளது.

**தனி அலுவலர்,**
**பல்லடம் நகராட்சி**

**<u>பொருள் : 01</u>**

பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான 228 கடைகளுக்கு அரசாணை (நிலை) எண் : 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : 03.07.2007ன்படி வாடகை மறுமதிப்பீடு செய்யப்பட்டு பொது ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. அவற்றில் ஏலம் போகாத மற்றும் நகராட்சிக்கு திரும்ப ஒப்படைக்கப்பட்ட கடைகளுக்கு பலமுறை மறு ஏலம் விடப்பட்டும், அவற்றை ஏலம் எடுக்க எவரும் முன்வராததால் கடைகள் வருமானம் இன்றி தொடர்ந்து காலியாக உள்ளது.

எனவே, ஏலம் எடுக்காத கடைகளை கள ஆய்வு மேற்கொண்டு, அதன் தொடர்புடைய காரணிகளை ஆராய்ந்து, கடைகள் ஏலத்தில் விட்டு வருமானம் ஈட்ட பரிந்துரை செய்ய ஏதுவாக ஒரு குழு அமைத்து, குழுவின் அறிக்கையின் அடிப்படையில் மேல்நடவடிக்கை மேற்கொண்டு அனைத்து கடைகளையும் பொது ஏலத்தில் விட்டு நகராட்சிக்கு வருமானம் ஈட்ட முடிவு செய்யப்பட்டது. அதற்கிணங்க பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான நீண்ட காலமாக ஏலம் எடுக்காத 42 கடைகள் அனைத்தும் கள ஆய்வு மேற்கொண்டு பல்வேறு காரணிகளை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க அமைக்கப்பட்ட சீராய்வு குழு தொடர்புடைய ஆவணங்கள் மற்றும் பரிந்துரையுடன் கீழ்கண்டவாறு தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளது: -

**அறிக்கை**:

பல்லடம் நகராட்சி பேரூராட்சியில் இருந்து கடந்த 2011ம் ஆண்டு முதல் நகராட்சியாக நிலை உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சிக்கு சொந்தமான 228 கடைகள் உள்ளன. அவற்றில் கீழ்கண்ட அமைவிடங்களில் கட்டப்பட்ட சில கடைகள் மட்டும் பொது ஏலம் மூலமாக வாடகைக்கு எடுக்கப்படாமல் உள்ளது. : -

i. பல்லடம் நகராட்சிக்கு சொந்தமாக **அண்ணா பேருந்து நிலையம்** கோவை – திருச்சி நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இப்பேருந்து நிலையத்தில் கடந்த 1989ம் ஆண்டு 18 கடைகள் கட்டப்பட்டுள்ளது. இக்கடைகளுக்கு 01.08.2016 முதல் வாடகை மறு மதிப்பீடு செய்யப்பட்டது. குத்தகைதாரர்கள் ஒப்புக்கொள்ளாததால் பொது ஏலம் மூலம் மீண்டும் குத்தகைக்கு விடப்பட்டது. அவற்றில் 2 கடைகள் மட்டும் ஏலம் எடுத்தும், முன்பணம் கட்டவும் இல்லை, கடையை உபயோகிக்கவும் இல்லை என்பதால், காலியாகவே உள்ளது. 1 கடை மட்டும் ஏலம் போகவில்லை. அதன்பின்னர், 2019ல் 2 கடையும், 2020ல் 1 கடையும் திரும்ப ஒப்படைத்து விட்டனர். எனவே, 6 கடைகள் காலியாக இருந்ததால் பலமுறை பொது ஏலம் விடப்பட்டும் கடைகள் ஏலம் போகவில்லை.

ii. **தினசரி மார்க்கெட்** கடந்த 1999ம் ஆண்டு 48 கடைகள் கட்டப்பட்டுள்ளது இக்கடைகளுக்கு கடந்த 01.04.2015ம் ஆண்டு முதல் வாடகை மறு மதிப்பீடு செய்யப்பட்டது. குத்தகைதாரர்கள் ஒப்புக்கொள்ளாததால் 48 கடைகளும் பொது ஏலம் மூலம் மீண்டும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. அவற்றில் 4 கடைகள் ஏலம் எடுக்கவில்லை. ஏலம் எடுக்கப்பட்ட 44 கடைகளில் 2016ல் 2 கடைகளும், 2017ல் 1 கடையும், 2018ல் 9 கடைகளும், திரும்ப ஒப்படைத்துவிட்டனர். எனவே, இவ்வமைவிடத்தில் 16 கடைகள் காலியாக இருந்ததால் பலமுறை பொது ஏலம் விடப்பட்டும் கடைகள் ஏலம்போகவில்லை.

iii. என்.ஜி.ஆர்.சாலைக்கும், பேருந்து நிலையத்திற்கும் இடைப்பட்ட இடத்தில் அமைந்துள்ள **52 வாரச்சந்தை கடைகள்** கடந்த 1999ம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது. இக்கடைகளுக்கு கடந்த 01.04.2015ம் ஆண்டு முதல் வாடகை மறு மதிப்பீடு செய்யப்பட்டது. குத்தகைதாரர்கள் ஒப்புக்கொள்ளாததால் 52 கடைகளும் பொது ஏலம் மூலம் மீண்டும் குத்தகைக்கு விடப்பட்டது. அவற்றில் 1 கடை மட்டும் ஏலம் எடுக்கவில்லை. ஏலம் எடுக்கப்பட்ட 51 கடைகளில் 2017ல் 1 கடையும், 2018 ல் 2 கடைகளும் திரும்ப ஒப்படைத்து விட்டனர். எனவே, இவ்வமைவிடத்தில் 4 வாரச்சந்தை கடைகள் காலியாக இருந்ததால் பலமுறை பொது ஏலம் விடப்பட்டும் கடைகள் ஏலம்போகவில்லை.

iv. **பல்லடம் அண்ணா பேருந்துநிலையம் 2015**ம் ஆண்டு விரிவாக்கம் செய்தபோது **11** கடைகள் புதிதாக கட்டப்பட்டு வாடகை நிர்ணயம் செய்து பொது ஏலம் விடப்பட்டு **11** கடைகளும் குத்தகைக்கு விடப்பட்டது. அதன்பின்னர் **3** ஆண்டுகள் கழித்து **4** கடைகள் வியாபாரம் சரிவர போகவில்லை என்றும், நிர்ணயிக்கப்பட்ட வாடகையை செலுத்த முடியவில்லை என்றும், கடந்த **2018**ல் திரும்ப ஒப்படைத்து விட்டனர். எனவே, 4 கடைகள் காலியாக இருந்ததால் பலமுறை பொது ஏலம் விடப்பட்டும் கடைகள் ஏலம்போகவில்லை.

v. **என்.ஜி.ஆர். சாலையில்** ஏற்கனவே கட்டப்பட்டுள்ள **40** கடைகளுக்கு மேல்தளத்தில் கடந்த **2016**ம் ஆண்டு **11** கடைகள் புதிதாக கட்டப்பட்டு வாடகை நிர்ணயம் செய்து பொது ஏலத்திற்கு விளம்பரப்படுத்தப்பட்டது. ஆனால், ஐந்து வருடங்கள் ஆகியும் கடைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட வாடகை அதிகம் என்பதால் ஒருவர் கூட மேற்கண்ட முதல் தளத்தில் அமைந்துள்ள **11** கடைகளையும் ஏலத்தில் எடுக்க முன்வரவில்லை.

vi. **பல்லடம் அண்ணா பேருந்து நிலையத்தின்** மேற்குபுறத்தில் **2016**ம் ஆண்டு **256** ச.அடி அளவுள்ள **1** கட்டிடம் கட்டி வாடகை நிர்ணயம் செய்து பொது ஏலத்திற்கு விடப்பட்டது. ஆனால், வாடகை அதிகம் என்பதால் ஒருவர் கூட ஏலம் எடுக்க முன்வரவில்லை.

இச்சீராய்வு குழு **13.02.2021** அன்று கள ஆய்வு மேற்கொண்டு பல்வேறு உண்மை தன்மைகளை ஆராய்ந்து, கடைகள் அமைந்துள்ள அமைவிடங்களின் அடிப்படையிலும், கடையின் அளவு, கட்டடத்தின் தோற்றம், வாடிக்கையாளர்கள் எளிதில் அணுகுவதற்கான சாத்தியம் போன்ற பல்வேறு அம்சங்கள் ஆய்வு செய்யப்பட்டு இன்றைய நாளில் இந்நகரில் நிலவி வரும் வாடகைக்கான சந்தை மதிப்பீட்டின் அடிப்படையில் கீழ்கண்டவாறு கடைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்தும், அதிகளவு வைப்புத்தொகை கோராமல் பகுதியளவு வைப்புத்தொகையுடன் பொது ஏலம் விடும் பட்சத்தில் வணிகர்கள் இக்கடைகளை ஏலம் எடுக்க முன்வருவார்கள் என இக்குழு கருதுகிறது. அதனடிப்படையில், வருமானம் இன்றி தொடர்ந்து ஏலம் போகாமல் காலியாக இருக்கும் கடைகளுக்கு உரிய வாடகையை நிர்ணயம் செய்து ஏலம் விடும்பட்சத்தில் வருவாயை ஈட்டி நகராட்சியின் நிதி ஆதாரம் உயரும் என்பதால் நகராட்சி நிர்வாக நலன் கருதி தற்போதைய சந்தை மதிப்பீட்டின் அடிப்படையிலும், சூழ்நிலை காரண காரியங்களின் அடிப்படையிலும், கீழ்கண்டவாறு வாடகையை நிர்ணயம் செய்யலாம் என இக்குழு பரிந்துரைக்கிறது: -

| வ. எண் | கடைகள் அமைவிடம் | கடை எண் | ச.அடி | பழைய வாடகை | மறுமதிப்பீடு செய்யப்பட்ட வாடகை | சீராய்வு குழு பரிந்துரைக்கப்படும் வாடகை தொகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | என்.ஜி.ஆர். சாலை முதல் தளம் | 1/11 | 10 x 16 = 160 | புதிய கடைகள் | 13210 * | 4500 |
| 2 | | 2/11 | 10 x 16 = 160 | | 13210 * | 4500 |
| 3 | | 3/11 | 10 x 16 = 160 | | 13210 * | 4500 |
| 4 | | 4/11 | 10 x 16 = 160 | | 13210 * | 4500 |
| 5 | | 5/11 | 10 x 16 = 160 | | 13210 * | 4500 |
| 6 | | 6/11 | 10 x 16 = 160 | | 13210 * | 4500 |
| 7 | | 7/11 | 10 x 16 = 160 | | 13210 * | 4500 |
| 8 | | 8/11 | 10 x 16 = 160 | | 13210 * | 4500 |
| 9 | | 9/11 | 10 x 16 = 160 | | 13210 * | 4500 |
| 10 | | 10/11 | 10 x 16 = 160 | | 13210 * | 4500 |
| 11 | | 11/11 | 10 x 16 = 160 | | 13210 * | 4500 |
| 12 | தினசரி மார்க்கெட் | 14/48 | 8 x 6= 48 | 2730 | 7100 | 4700 |
| 13 | | 17/48 | 8 x 6= 48 | 2730 | 9000 | 4700 |
| 14 | | 18/48 | 8 x 6= 48 | 2906 | 7500 | 4700 |
| 15 | | 20/48 | 8 x 6= 48 | 2906 | 7100 | 4700 |
| 16 | | 21/48 | 8 x 6= 48 | 2603 | 7100 | 4700 |
| 17 | | 22/48 | 8 x 6= 48 | 2730 | 7030 | 4700 |
| 18 | | 24/48 | 8 x 6= 48 | 2450 | 7100 | 4700 |
| 19 | | 27/48 | 8 x 6= 48 | 2450 | 7100 | 4700 |
| 20 | | 28/48 | 8 x 6= 48 | 2906 | 7300 | 4700 |
| 21 | | 37/48 | 8 x 6= 48 | 2630 | 3600 | 3500 |
| 22 | | 38/48 | 8 x 6= 48 | 2450 | 3500 | 3500 |
| 23 | | 39/48 | 8 x 6= 48 | 2663 | 7100 | 3500 |
| 24 | | 40/48 | 8 x 6= 48 | 3170 | 7100 | 3500 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 25 | | 41/48 | 8 x 6= 48 | 3697 | 7100 | 3500 |
| 26 | | 42/48 | 8 x 6= 48 | 4843 | 7100 | 3500 |
| 27 | | 47/48 | 8 x 6= 48 | 3259 | 0 | 2500 |
| 28 | வாரச்சந்தை | 4/62 | 10 x 8 = 80 | 1565 | 2100 | 2100 |
| 29 | | 5/62 | 10 x 8 = 80 | 1433 | 0 | 1433 |
| 30 | | 7/62 | 10 x 8 = 80 | 1401 | 2100 | 2100 |
| 31 | | 11/62 | 10 x 8 = 80 | 1365 | 2100 | 1830 |
| | **பேருந்து நிலையத்தில் 1989ல் கட்டிய கடைகள்** | | | | | |
| 32 | கிழக்கு பார்த்த கடை | 3 | 18 x 8 = 144 | 18807 | 21700 | 8200 |
| 33 | கிழக்கு பார்த்த கடை | 4 | 18 x 8 = 144 | 8403 | 14700 | 8200 |
| 34 | வடக்கு பார்த்த கடை | 2 | 10 x 8 = 80 | 6883 | 14700 | 3000 |
| 35 | மேற்கு பார்த்த கடை | 2 | 18 x 8 = 144 | 6342 | 14600 | 3000 |
| 36 | மேற்கு பார்த்த கடை | 4 | 18 x 8 = 144 | 4226 | 15000 | 4000 |
| 37 | மேற்கு பார்த்த கடை கேபிள் டிவி அறை | 1 | 18 x 8 = 144 | – | 4366 | 4000 |
| | **பேருந்து நிலையத்தில் 2015ல் கட்டிய கடைகள்** | | | | | |
| 38 | வடபுற கடை | 6/11 | 10 x 16 = 160 | புதிய கடைகள் | 15100 * | 4000 |
| 39 | வடபுற கடை | 8/11 | 10 x 16 = 160 | | 14200 * | 4000 |
| 40 | வடபுற கடை | 9/11 | 10 x 16 = 160 | | 14200 * | 4000 |
| 41 | வடபுற கடை | 11/11 | 10 x 16 = 160 | | 13500 * | 4000 |
| 42 | பேருந்து நிலைய பொருட்கள் பாதுகாப்பு அறை | 1 | 20.5 x 12.5 = 256 | – | – | 8200 |

* **புதியதாக கட்டப்பட்ட கடைகள் என்பதால் முதல் முறையாக நிர்ணயம் செய்யப்பட்டது.**

2015ம் ஆண்டு முதல் நாளது வரை பலமுறை விளம்பரப்படுத்தி ஏல அறிவிப்பு செய்தும், ஏலம் எடுக்க எவரும் முன்வராததால் வருவாய் இல்லாததோடு விளம்பர செலவும் ஏற்பட்டுள்ளது. எனவே, மேற்குறிப்பிட்ட ஏலம் எடுக்காத கடைகள் பூட்டிய நிலையிலேயே உள்ளதால், கட்டிடமும் சேதாரமடைவதோடு, எந்த நோக்கத்திற்காக கட்டிடம் கட்டப்பட்டதோ அதற்கான பயன்பாட்டிற்கு விடாமல் வருவாய் இன்றி உள்ளது. இதனை கருத்திற்கொண்டு நகராட்சிக்கு தொடர்ந்து வருவாய் கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில், நகராட்சி நிர்வாக நலன் கருதி சீராய்வு குழுவினரால் நிர்ணயித்து பரிந்துரைக்கப்பட்ட வாடகையை மேற்படி 42 கடைகளுக்கு மட்டுமே அரசு மதிப்பீடாக ஏற்று, பொது ஏலத்தின் மூலமாக குத்தகைக்கு விடவும், தற்போது நடைமுறையில் பெறப்படும் வைப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகையினில் பகுதி அளவிற்கு மட்டுமே பெறுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. சீராய்வு குழு பரிந்துரையை மேற்குறிப்பிட்ட 42 கடைகளுக்கு மட்டும் ஏற்கலாம் மற்ற கடைகளுக்கு இப்பரிந்துரை பொருந்தாது.
2. மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு நாளிதழ்களில் விளம்பரம் செய்யலாம்.
3. ஏலம் நடத்திடவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் : 1422/2014/அ2

**<u>தீர்மானம் எண் 27/ நாள் : 15.02.2021 அனுமதிக்கப்படுகிறது.</u>**

## <u>பொருள் : 02</u>

பல்லடம் நகராட்சி வார்டு எண் :11 வடுகபாளையம், குமரன் நகர் ஐந்தாவது வீதியில் அமைந்துள்ள பொது கிணற்றின் ஒரு பக்க சுவர் மழையின் காரணமாக சரிந்து கிணற்றின் உள்ளே விழுந்து விட்டது. பொதுக்கிணற்றை நேரில் ஆய்வு செய்யப்பட்டதில், சுவர் சாலை ஒட்டி உள்ள ஒரு பக்கச் சுவர் சுமார் 12 மீட்டர் நீளத்திற்கும், 5 மீட்டர் ஆழத்திற்கும் சரிந்து கிணற்றின்

உள்ளே விழுந்தது கண்டறியப்பட்டது. பொதுமக்களுக்கு உயிர் சேதம் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு பணியினை மிக விரைவில் முடித்துத் தருமாறு அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர். கிணற்றின் ஒரு பக்கச்சுவர் 'Reinforced cement concrete wall' அமைக்கும் பணி மற்றும் பராமரித்தல் பணிகள் மேற்கொள்ளவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.8.90 இலட்சத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள 07.01.2021 அன்று தனி அலுவலர் அவர்களால் முன் அனுமதி பெறப்பட்டதைத் தொடர்ந்து, 05.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் :–

1. திரு.C.தேவராஜ்,
ஒப்பந்ததாரர், திருப்பூர். – மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.13% குறைவு

2. திருவாளர்கள்.D.R.கன்ட்ரக்ஸன்ஸ்,
ஒப்பந்ததாரர், ஒட்டன்சத்திரம். – மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.46% அதிகம்

இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.13% குறைவான விலை விகிதத்தை கொடுத்துள்ள திரு.C.தேவராஜ், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களால் 05.02.2021 அன்று முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண்: 1288/2020/இ1)

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2020–2021 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண் 28/ நாள் : 15.02.2021 அனுமதிக்கப்படுகிறது.</u>**

## <u>பொருள் : 03</u>

நகராட்சிக்கு சொந்தமான 12 குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளில் பொருத்தப்பட்டுள்ள திரவ குளோரினேசன் இயந்திரத்திற்கு ஆண்டு பராமரிப்பு செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.2.10 இலட்சத்திற்கு 05.02.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் :–

1. திருவாளர்கள்.ஸ்ரீ இராஜகணபதி இன்ஜினியரிங்
வொர்க்ஸ், சென்னை – மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.33% குறைவு

2. திருவாளர்கள். ஸ்ரீ சபரி இன்ஜினியரிங்,
சென்னை – மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 2.67% அதிகம்

இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.33% குறைவான விலை விகிதத்தை கொடுத்துள்ள திருவாளர்கள்.ஸ்ரீ இராஜகணபதி இன்ஜினியரிங் வொர்க்ஸ், சென்னை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். (ந.க.எண் : 1288/2020/இ1)

<u>அலுவலகக் குறிப்பு :</u>
மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண் 29/ நாள் : 15.02.2021 அனுமதிக்கப்படுகிறது.</u>**

**தனிஅலுவலர்/**
**ஆணையாளர்**
**பல்லடம் நகராட்சி**